**குற்றவியல் நீதித்துறை நடுவர், (விரைவு நீதிமன்றம்), ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.**

**முன்னிலை: திருமதி. V. பார்கவி, B.A., B.L., L.L.M.**

**நீதித்துறை நடுவர், (விரைவு நீதிமன்றம்), ஓசூர்.**

**2026 - ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 09-ம் நாள் வியாழக்கிழமை**

**STC.No.77 - 2018**

**CNR.No. TNKI10-000082-2018**

K. சின்னசாமி (வயது 42/2018),
எண்.2/264-C, சக்திவேல் நகர்,
நாராயணா ஸ்டோர் பின்புறம், ஜூஜூவாடி,
சிப்காட் அஞ்சல், ஒசூர் தாலுக்கா - 635 126,
கிருஷ்ணகிரி மாவட்டம்,
தமிழ்நாடு மாநிலம். ... புகார்தாரர்

/Vs/

K. வெங்கடேசன் (வயது 37/2018),
த/பெ.குப்புசாமி,
கதவு எண்.2/463/3-G, அசோக் ரெட்டி பில்டிங்,
ரோஜா நகர், 2nd கிராஸ் மெயின் ரோடு,
ஜூஜூவாடி, சிப்காட் அஞ்சல்,
ஒசூர் தாலுக்கா,
கிருஷ்ணகிரி மாவட்டம், பின்கோடு-635 126.
Working in Designing Department,
M/s.Teneja Aerospace & Aviation Ltd (TALL),
பெலகொண்டப்பள்ளி கிராமம் மற்றும் அஞ்சல்,
தேன்கனிக்கோட்டை தாலுக்கா,

கிருஷ்ணகிரி மாவட்டம், பின்கோடு- 635 114. ... எதிரி

**<u>சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021-ம் தேதியிட்ட</u>**

**<u>Roc.No.814/2020/RG/F1-ன் படி வழக்கின் சுருக்கம்</u>**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | எதிரி நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்ட நாள் | | | Nil |
| 2. | புகார் மனு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | | | 10.04.2018 |
| 3. | முதன்மை பதிவேட்டு வழக்கு மேல் விசாரணைக்கு அனுப்பப்பட்ட நாள் | | | Nil |
| 4. | எதிரியிடம் கு.வி.மு.ச. 251 பிரிவின் கீழ் வினவிய நாள் | | | 07.07.2018, 10.11.2023 |
| 5. | இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பல்வகை மனுக்களின் விவரம் | | | |
| | குற்றப்பல்வகை மனு எண். | உத்தரவு அனுமதிக்கப்பட்டது / தள்ளுபடி செய்யப்பட்டது | மேல்முறையீட்டு வழக்கு விவரம் | |
| | Crlmp No.388/24, dt:21.03.2024 | தள்ளுபடி செய்யப்பட்டது | இல்லை | |
| | Crlmp No.485/24, dt:13.06.2024 | அனுமதிக்கப்பட்டது | இல்லை | |
| | Crlmp No.486/24, dt:13.06.2024 | அனுமதிக்கப்பட்டது | இல்லை | |

| | | | | |
|---|---|---|---|---|
| | Crlmp No.1493/24, dt:16.02.2026 | அனுமதிக்கப்பட்டது | இல்லை | |
| | Crlmp No.1494/24, dt:16.02.2026 | அனுமதிக்கப்பட்டது | இல்லை | |
| 6. | சாட்சிகள் விசாரித்த நாட்களின் விவரம் | | | |
| | சாட்சிகள் | முதல் விசாரணை நாள் | குறுக்கு விசாரணை நாள் | |
| | திரு. சின்னசாமி | 18.04.2018 | 13.08.2024, 06.09.2024 | பு.சா.1 |
| 7. | எதிரியிடம் கு.வி.மு.ச. 313 (1) (ஆ) பிரிவின் கீழ் வினவப்பட்ட நாள் | | | 25.09.2024 |
| 8. | எதிரி தலைமறைவு ஆகிய நாட்கள் மற்றும் நீதிமன்றத்தில் ஆஜராகிய /ஆஜர்படுத்தப்பட்ட நாட்கள் | | | --- |
| 9. | மாண்புமிகு மேலமை நீதிமன்றத்தின் உத்தரவு படி வழக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தால் அதன் விவரம் மற்றும் தீர்வு | | | --- |

இவ்வழக்கு கடந்த 06.04.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபொழுது, புகார்தாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.ஜெயசீலன் அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.N.அருள் அவர்களும், ஆஜராகியும் இருதரப்பு வாதங்களை கேட்டும், சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

இவ்வழக்கானது மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம், பிரிவு 138-ன் கீழ் காசோலை மோசடி குற்றத்திற்காக எதிரியை தண்டிக்கக்கோரியும், நஷ்ட ஈடு செலுத்தகோரியும், புகார்தாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

2) **<u>புகார்தாரர் தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு:-</u>**

2.1) புகார்தாரரும், எதிரியும் கடந்த 10 வருடங்களாக குடும்ப நண்பர்கள் என்றும், புகார்தாரரும், எதிரியும் ஒரே பகுதியில் வசித்து வருவதாகவும், புகார்தாரர் ஒசூரில், சிப்காட் பக்கமுள்ள ராஜேஸ்வரி லேஅவுட் என்ற இடத்தில் M/s. KCR Enterprises என்ற Small Scale Industry ஐ நடத்தி வருவதாகவும், மேற்படி எதிரி கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள தேன்கனிக்கோட்டை தாலுக்கா, பெலக்கொண்டப்பள்ளியில் உள்ள M/s.Teneja Aerospace and Aviation Ltd (TALL) என்ற நிறுவனத்தில் Designing Department-ல் வேலை செய்து வருவதாகவும், மேற்படி நண்பர் என்ற அடிப்படையில் எதிரி புகார்தாரரிடம் தனது சொந்த தேவையான land வாங்குவதற்காக ரூ.8,38,000/-ஐ கைமாற்றுக் கடனாக கேட்டதாகவும், மேற்படி எதிரி கடந்த 30.10.2015 ம் தேதியில் ரூ.1,00,000/-மும், கடந்த 02.11.2015 ம் தேதியில் ரூ.3,08,000/-மும், கடந்த 31.12..2015 ம் தேதியில் ரூ.1,80,000/-மும், கடந்த 14.01.2016 ம் தேதியில் ரூ.2,50,000/-மும் பணம் வாங்கியதாகவும், மேற்படி மொத்த தொகையான ரூ.8,38,000/-ஐ எதிரி கடந்த 30.06.2016 ம் தேதியில் திருப்பி தருவதாக

உறுதியளித்ததாகவும் புகார்தாரர் வழக்கில் கூறியுள்ளார்.

2.2) மேற்படி தேதியில் எதிரி தொகையை திருப்பி செலுத்தாததால், புகார்தாரரர் எதிரியிடம் பணத்தை திருப்பி தருமாறு பலமுறை கேட்டதாகவும், மேற்படி தொகைகளை திருப்பி செலுத்தும் பொருட்டு எதிரி கடந்த 26.11.2017 ம் தேதியில் 2 பின்தேதியிட்ட காசோலைகளை கொடுத்ததாகவும், மேற்படி கடந்த 28.11.2017 மற்றும் 07.12.2017 என்று பின்தேதியிட்டு ரூ.3,00,000/- மற்றும் ரூ.5,38,000/-த்திற்கு ICICI Bank, Hosur கிளையின் காசோலை எண்கள் (070896 மற்றும் 070897) என்ற 2 காசோலைகளை தனித்தனியாக புகார்தாரருக்கு கொடுத்ததாகவும் புகார்தாரர் வழக்கில் கூறியுள்ளார்.

2.3) மேற்படி புகார்தாரரின் அறிவுறுத்தலின் அடிப்படையில் காசோலைகளை புகார்தாரர் தனது வங்கியான Central Bank of India, Mookandapalli கிளையில் கடந்த 28.11.2017 மற்றும் 07.12.2017 ஆகிய தேதிகளில் வசூலுக்கு தாக்கல் செய்த போது காசோலைகளானது கடந்த 29.11.2017 மற்றும் 08.12.2017 ஆகிய தேதிகளில் Funds Insufficient என்று காரணம் குறிப்பிட்டு திருப்பப்பட்டதாகவும், மேற்படி மீண்டும் எதிரியின் அறிவுறுத்தலின் அடிப்படையில் காசோலைகளை புகார்தாரர் தனது வங்கியான Central Bank of India, Mookandapalli கிளையில் கடந்த 22.02.2018 ம் தேதியில் வசூலுக்கு தாக்கல் செய்த போது காசோலைகளானது கடந்த 23.02.2018 ம் தேதியில் Funds Insufficient என்று காரணம் குறிப்பிட்டு திருப்பப்பட்டதாகவும், அதன் பின்னர் கடந்த 02.03.2018-ம் தேதி புகார்தாரர் எதிரிக்கு சட்ட அறிவிப்பு

அனுப்பியதாகவும், அதை எதிரி 06.03.2018 -ம் தேதி பெற்றுக்கொண்டுவிட்டு, பதில் அறிவிப்பு அனுப்பாமலும், பணத்தை செலுத்தாமலும் இருந்து வந்துள்ளதாகவும், எனவே எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவுகள் 138 மற்றும் 142-ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டுமென்றும் புகார்தாரருக்கு நஷ்ட ஈடு வழங்கவேண்டுமென்றும் புகார்தாரர் இந்த வழக்கை எதிரி மீது தாக்கல் செய்துள்ளார்.

3) வழக்கின் அனைத்து ஆவணங்கள், புகார்தாரர் தாக்கல் செய்த பிரமாண பத்திரிக்கை மற்றும் குறித்த கால அளவு மற்றும் நீதிமன்ற ஆள்வரை எல்லை ஆகியவற்றை கருத்தில் கொண்ட பின்னர், வழக்கை கோப்பிற்கு எடுக்க முகாந்திரம் இருந்ததால் வழக்கானது 18.04.2018 -ம் தேதி கோப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, STC எண் வழங்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது.

4) குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 204(3)-ன் படி வழக்கின் நகல்கள் எதிரிக்கு அழைப்பாணையுடன் அனுப்பப்பட்டுள்ளது.

5) இந்த வழக்கு, அழைப்பாணை வழக்கு என்பதால் குற்றச்சாட்டுகள் வனையப்படவில்லை. மாறாக எதிரி மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவு 138-ன் கீழான குற்றத்திற்காக குற்றம் குறித்து வினவப்பட்ட (Substance of Accusation) போது, பொய் கேஸ் என்றும், காசோலைகளை நான் கொடுக்கவில்லை, நான் தான் அவருக்கு பணம் கொடுத்துள்ளேன், புகார்தாரர் என் மீது வேண்டுமென்றே பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், வழக்கை நடத்த விருப்பம் என்றும் கூறி குற்றத்தை மறுத்ததால் வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

6) இவ்வழக்கில் புகார்தாரர் சின்னசாமி புசா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் பு.த.சா.ஆ.1 முதல் பு.த.சா.ஆ.12 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**7) புகார்தாரர் தரப்பு சாட்சியின் சுருக்கம்:-**

7.1) புகார்தாரர் பு.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு தனது சாட்சியத்தில், புகார்தாரரும், எதிரியும் கடந்த 10 வருடங்களாக குடும்ப நண்பர்கள் என்றும், புகார்தாரரும், எதிரியும் ஒரே பகுதியில் வசித்து வருவதாகவும், புகார்தாரர் ஒசூரில், சிப்காட் பக்கமுள்ள ராஜேஸ்வரி லேஅவுட் என்ற இடத்தில் M/s. KCR Enterprises என்ற Small Scale Industry ஐ நடத்தி வருவதாகவும், மேற்படி எதிரி கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள தேன்கனிக்கோட்டை தாலுக்கா, பெலக்கொண்டப்பள்ளியில் உள்ள M/s.Teneja Aerospace and Aviation Ltd (TALL) என்ற நிறுவனத்தில் Designing Department ல் வேலை செய்து வருவதாகவும், மேற்படி நண்பர் என்ற அடிப்படையில் எதிரி புகார்தாரரிடம் தனது சொந்த தேவையான land வாங்குவதற்காக ரூ.8,38,000/-ஐ கைமாற்றுக் கடனாக கேட்டதாகவும், மேற்படி எதிரி கடந்த 30.10.2015 ம் தேதியில் ரூ.1,00,000/-மும், கடந்த 02.11.2015 ம் தேதியில் ரூ.3,08,000/-மும், கடந்த 31.12..2015 ம் தேதியில் ரூ.1,80,000/-மும், கடந்த 14.01.2016 ம் தேதியில் ரூ.2,50,000/-மும் பணம் வாங்கியதாகவும், மேற்படி மொத்த தொகையான ரூ.8,38,000/-ஐ எதிரி கடந்த 30.06.2016 ம் தேதியில் திருப்பி தருவதாக உறுதியளித்ததாகவும், மேற்படி தேதியில் எதிரி தொகையை திருப்பி செலுத்தாததால், புகார்தாரரர் எதிரியிடம் பணத்தை திருப்பி

தருமாறு பலமுறை கேட்டதாகவும், மேற்படி தொகைகளை திருப்பி செலுத்தும் பொருட்டு எதிரி கடந்த 26.11.2017 ம் தேதியில் 2 பின்தேதியிட்ட காசோலைகளை கொடுத்ததாகவும், மேற்படி கடந்த 28.11.2017 மற்றும் 07.12.2017 என்று பின்தேதியிட்டு ரூ.3,00,000/- மற்றும் ரூ.5,38,000/-த்திற்கு ICICI Bank, Hosur கிளையின் காசோலை எண்கள் (070896 மற்றும் 070897) என்ற 2 காசோலைகளை தனித்தனியாக புகார்தாரருக்கு கொடுத்ததாகவும், மேற்படி காசோலைகள் பு.த.சா.ஆ.1 மற்றும் 2 எனவும் சாட்சியம் அளித்துள்ளார்.

7.2) புகார்தாரர் பு.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு மேலும் தனது சாட்சியத்தில், மேற்படி புகார்தாரரின் அறிவுறுத்தலின் அடிப்படையில் காசோலைகளை புகார்தாரர் தனது வங்கியான Central Bank of India, Mookandapalli கிளையில் கடந்த 28.11.2017 மற்றும் 07.12.2017 ஆகிய தேதிகளில் வசூலுக்கு தாக்கல் செய்த போது காசோலைகளானது கடந்த 29.11.2017 மற்றும் 08.12.2017 ஆகிய தேதிகளில் Funds Insufficient என்று காரணம் குறிப்பிட்டு திருப்பப்பட்டதாகவும், மேற்படி காசோலைகள் திருப்பப்பட்டதற்கான வங்கி குறிப்பாணைகள் பு.த.சா.ஆ.3 மற்றும் 4 எனவும், மேற்படி மீண்டும் எதிரியின் அறிவுறுத்தலின் அடிப்படையில் காசோலைகளை புகார்தாரர் தனது வங்கியான Central Bank of India, Mookandapalli கிளையில் கடந்த 22.02.2018 ம் தேதியில் வசூலுக்கு தாக்கல் செய்த போது காசோலைகளானது கடந்த 23.02.2018 ம் தேதியில் Funds Insufficient என்று காரணம் குறிப்பிட்டு திருப்பப்பட்டதாகவும், மேற்படி காசோலைகள்

திருப்பப்பட்டதற்கான வங்கி குறிப்பாணைகள் பு.த.சா.ஆ.5 மற்றும் 6 எனவும்,அதன் பின்னர் 02.03.2018 -ம் தேதி புகார்தாரர் எதிரிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பியதாகவும், சட்ட அறிவிப்பானது பு.த.சா.ஆ.7 எனவும், மேற்படி பு.த.சா.ஆ.7 சட்ட அறிவிப்பு எதிரியின் வீட்டு முகவரிக்கு அனுப்பியதற்கான அஞ்சலக ரசீது பு.த.சா.ஆ.8 எனவும், மேற்படி பு.த.சா.ஆ.7 சட்ட அறிவிப்பு எதிரியின் அலுவலக முகவரிக்கு அனுப்பியதற்கான அஞ்சலக ரசீது பு.த.சா.ஆ.9 எனவும், மேற்படி பு.த.சா.ஆ.7 சட்ட அறிவிப்பை எதிரியின் வீட்டு முகவரியில் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை பு.த.சா.ஆ.10 எனவும், மேற்படி பு.த.சா.ஆ.7 சட்ட அறிவிப்பை எதிரியின் அலுவலக முகவரியில் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை பு.த.சா.ஆ.11 எனவும், மேற்படி புகார்தாரரின் M/s. KCR Enterprises நிறுவனத்தின் 01.10.2015 முதல் 31.01.2016 வரையிலான வங்கி கணக்கு அறிக்கை பு.த.சா.ஆ.12 எனவும், ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, எதிரி அறிவிப்பை பெற்றுக்கொண்டும், பதில் அறிவிப்பு அனுப்பாமலும், பணத்தை திருப்பி செலுத்தாமலும் இருந்து வந்துள்ளதால் எதிரி மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவுகள் 138 மற்றும் 142-ன் கீழ் குற்றம் புரிந்துள்ளார் எனவும், அவரை தண்டிக்க வேண்டும் எனவும், புகார்தாரருக்கு உரிய நஷ்ட ஈடு வழங்கவேண்டும் எனவும் புகார்தாரர் சாட்சியம் அளித்துள்ளார்.

8) புகார்தாரர் தரப்பு சாட்சியங்கள் முடிவடைந்த பின்னர் குற்றவியல் நடைமுறைச்சட்டம், பிரிவு 313 (1) (ஆ)-ன் கீழாக, புகார்தாரர் நீதிமன்றத்தில் அளித்த

சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமான சூழ்நிலைகளை எடுத்துக்கூறி எதிரியிடம் வினவப்பட்டது, பொய் சாட்சி, நான் எந்த ஆவணங்களும் தரவில்லை என்றும், பொய் சாட்சி, எனது கம்பெனிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பியுள்ளார்கள், அப்போது அந்த கம்பெனியில் நான் இல்லை என்றும், பொய் வழக்கு, தனது தரப்பில் சாட்சிகள் இல்லை என்றும் கூறியுள்ளார்.

9) இவ்வழக்கில் எதிரி தரப்பில் எந்தவொரு சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. மேலும் எதிரி தரப்பில் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்த போது அவர் மூலம் எ.த.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

10) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கின் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

11) புகார்தாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர், எதிரி புகார்தாரரிடமிருந்து ரூ.8,38,000/- பல்வேறு தேதிகளில் கடனாக பெற்றுக்கொண்டு வழக்கு காசோலைகளை கொடுத்து ஏமாற்றியிருப்பதாகவும், புகார்தாரர் தரப்பில் பு.சா.1 விசாரணை செய்யப்பட்டு பு.த.சா.ஆ.1 முதல் 12 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்திருப்பதாகவும், பு.த.சா.ஆ.12 ஆவணத்தின் மூலம் புகார்தாரர் வங்கியின் மூலமாக எதிரிக்கு பணம் கொடுத்தது நிரூபிக்கப்பட்டிருப்பதாகவும், எதிரி புகார்தாரர் அனுப்பிய சட்ட அறிவிப்பை பெற்றுக்கொண்டுள்ளார் என்றும், எதிரி நீதிமன்றத்தில் வழக்கு குறித்து கேட்ட போது புகார்தாரர் தான் எதிரிக்கு பணம் கொடுக்கவேண்டும் என்பதற்கும், புகார்தாரரிடம் எதிரி எந்த ஆவணங்களையும் கொடுக்கவில்லை

என்பதற்கும் எதிரி தரப்பில் எந்த சாட்சிய சான்றாவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், புகார்தாரர் வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்திருப்பதாகவும், எனவே எதிரியை தண்டிக்க வேண்டுமென்றும் கூறி வாதிட்டார்.

12) எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர், புகார்தாரருக்கு எதிரிக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு வருமானம் இல்லை என்றும், புகார்தாரர் தனது நிறுவனத்தின் மூலம் வந்த தொகையை எதிரிக்கு கடன் கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ள நிலையில் நிறுவனத்தை வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றும், அதனால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், வங்கி ஆவணங்கள் மற்றும் வங்கி சாட்சிகள் யாரும் புகார்தாரரின் வருமானத்தை நிரூபிக்கும் பொருட்டு தாக்கல் செய்யவில்லை என்றும், வருமானத்தை நிரூபிக்க தனிநபர் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை என்றும், புகார்தாரர் 4 முறை எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லியுள்ள நிலையில் ஒரு முறை பணம் கொடுத்து ஏமாற்றிய நபருக்கு மீண்டும் பணம் கொடுத்ததாக சொல்வது நம்பத்தகுந்ததாக இல்லை என்றும், பு.த.சா.ஆ.1, 2 காசோலைகளில் உள்ள கையெழுத்தை நிரூபிக்க புகார்தாரர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், எதிரி புகார்தாரருக்கு செலுத்த வேண்டிய சட்டபடியான கடன் எதுவும் இல்லை என்றும், காசோலை திருப்பப்பட்ட 30 நாட்களுக்குள் சட்ட அறிவிப்பு அனுப்பவில்லை என்றும், எதிரியிடம் கேட்டு 2 வதாக காசோலைகளை தாக்கல் செய்ததற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், எதிரி

பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்பது எதிரியின் வழக்கிற்கு பாதகமாக அமையாது என்றும், புகார்தாரர் காசோலைகள் கொடுக்கும் போது பண பரிவர்த்தனை நடைபெறவில்லை என்று ஒப்பு கொண்டிருப்பதாகவும், புகார்தாரர் பொய்யாக வழக்கு தாக்கல் செய்திருப்பதாகவும், புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் அனுமானத்தை எதிரி மறுத்தலித்துள்ளதாகவும், புகார்தாரர் வசம் நிரூபிக்கும் சுமை திருப்பப்பட்டிருப்பதாகவும், புகார்தாரர் வழக்கை நிரூபிக்க தவறிவிட்டதாகவும், எனவே எதிரியை வழக்கிலிருந்து விடுதலை செய்து புகாரை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூறி கீழ்கண்ட மேலமை நீதிமன்றங்களின் முன்தீர்ப்புகளை (2023 (1) MWN (Cri) DCC 190 (Mad), 2023 (3) MWN (Cr.)DCC 26 (SC), 2021 (1) MWN (Cr.) DCC 173 (Mad), 2022 (2) T.N.L.R. 335 (Mad) சுட்டிக்காட்டி வாதிட்டார்.

13) **இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால் வழக்கு காசோலைகள் பு.த.சா.ஆ.1 மற்றும் 2 ஆனது சட்டப்படியான கடனை தீர்ப்பதற்காக கொடுக்கப்பட்டதா என்பதும் எதிரியின் மீதான மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138-ன் கீழான குற்றத்தை எதிரி புரிந்துள்ளார் என்பதை புகார்தாரர் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துள்ளாரா? என்பதேயாகும்.**

14) இவ்வழக்கில் புகார்தாரருக்கு எதிரி ரூ.8,38,000/- (எட்டு இலட்சத்து முப்பதெட்டாயிரம்) தரவேண்டும் என்றும், அதற்கு எதிரி வழக்கு காசோலைகளை (எண்கள்.070896 (பு.த.சா.ஆ.1) மற்றும் 070897 (பு.த.சா.ஆ.2) ரூ.3,00,000/- (மூன்று

இலட்சம்), மற்றும் ரூ.5,38,000/- (ஐந்து இலட்சத்து முப்பதெட்டாயிரம்) க்கு புகார்தாரரிடம் கொடுத்தார் என்றும் அவைகள் "Funds Insufficient" என்று திருப்பப்பட்டதாகவும் புகார்தாரர் வழக்கில் கூறியுள்ளார்.

| | | |
|---|---|---|
| காசோலைகளில் உள்ள தேதி | : | 28.11.2017, 07.12.2017 |
| காசோலைகள் வசூலுக்கு செலுத்தப்பட்ட நாள் | : | 28.11.2017, 07.12.2017 மற்றும் 22.02.2018 |
| காசோலைகள் திருப்பப்பட்ட நாள் | : | 29.11.2017, 08.12.2017 மற்றும் 23.02.2018 |
| வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்ட நாள் | : | 02.03.2018 |
| வழக்கறிஞர் அறிவிப்பு பெற்றுக்கொண்ட நாள் | : | 06.03.2018 |
| புகார் தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 10.04.2018 |
| புகார் கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | : | 18.04.2018 |

15) மேற்கூறிய சங்கதிகள் அனைத்தையும் கவனிக்கும்போது மாற்று முறை ஆவணங்கள் சட்டத்தின் கால வரையரைக்குள் (Limitation period or Statutory Limitations) இப்புகாரின் வழக்கு மூலமும், ஏனைய பிற சங்கதிகளும் சரியான முறையில் அமைந்துள்ளது என்பது தெளிவாகிறது. மேலும் இவ்வழக்கில் புகார்தாரரின் வசிப்பிடம் மற்றும் அவரது வங்கிக் கணக்குள்ள வங்கி, பணபரிவர்த்தனை நடைபெற்றதாக சொல்லப்படும் இடம் ஆகியவை Central Bank, Mookandapalli கிளை, ஒசூர் நகர காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்டுள்ளது. மேற்படி காவல் நிலையமானது ஒசூர் நகரத்தில் அமைந்துள்ள காரணத்தினால் இப்புகாரானது இந்நீதிமன்றத்தின் ஆளுகை வரம்பிற்குள் (Jurisdiction)

அமைந்துள்ளது. இவ்வாறாக, மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவுகள் 138 மற்றும் 142-ன் கீழ் தாக்கல் செய்யப்பபட்டுள்ள இவ்வழக்கின் காலவரையறை (Limitation Period), சட்ட நடவடிக்கைகள் மற்றும் வழக்கு மூலம் (Cause of action) சரியான முறையில் அமைந்துள்ள காரணத்தினாலும், இப்புகாரின் சங்கதிகள் இந்நீதிமன்றத்தின் ஆள்வரை வரம்பிற்குள் (Jurisdiction) அமைந்துள்ளதாலும், இப்புகாரானது இந்நீதிமன்றத்தால் புலன் கொள்ளுதலுக்கு (Taking Cognizance) எடுத்துக்கொள்ளப்பட்டு வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

16) இவ்வழக்கில் புகார்தாரர் சின்னசாமி பு.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் பு.த.சா.ஆ.1 முதல் பு.த.சா.ஆ.12 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பு.த.சா.ஆ.1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள வழக்கு காசோலைகளைப் பொறுத்து வழக்கு காசோலைகளை எதிரி புகார்தாரருக்கு கொடுக்கவில்லை என்றோ, வழக்கு காசோலைகளில் உள்ள கையெழுத்தை எதிரி செய்யவில்லை என்றோ எதிரி தரப்பில் மறுத்தளிக்காத நிலையில் மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 139-ன் கீழ் வழக்கு காசோலைகளானது கடனை தீர்க்கும்பொருட்டு எதிரியால் கொடுக்கப்பட்டது என தீர்மானித்து மாற்றுமுறை ஆவணச்சட்டத்தின் கீழான அனுமானம் புகார்தாரருக்கு ஆதரவாக இருப்பதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. புகார்தாருக்கு ஆதரவாக இருக்கும் அனுமானத்தை மறுத்தளிக்கவேண்டிய பொறுப்பு எதிரிக்கு உள்ள நிலையில் அந்த மறுத்தளித்தலை எதிரி தரப்பில் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்வதன் மூலமும், சாட்சிகளை விசாரிப்பதன் மூலமும் மற்றும் ஆவணங்களின் மூலமும் மறுத்தலிக்கலாம்.

17) மேலும் இவ்வழக்கில் எதிரியிடம் குற்றம் குறித்து முதல் முறை வினவப்பட்ட போது **"பொய் கேஸ் என்றும், காசோலைகளை நான் கொடுக்கவில்லை, நான் தான் அவருக்கு பணம் கொடுத்துள்ளேன், புகார்தாரர் என் மீது வேண்டுமென்றே பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், வழக்கை நடத்த விருப்பம்"** என்றும் கூறியுள்ளார். மீண்டும் 313 (1) (b) ன் கீழாக புகார்தாரரின் சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக இருக்கும் சூழ்நிலைகளை எதிரியிடம் விளக்கி கேட்ட போது **"பொய் சாட்சி, நான் எந்த ஆவணங்களும் தரவில்லை என்றும், பொய் சாட்சி, எனது கம்பெனிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பியுள்ளார்கள், அப்போது அந்த கம்பெனியில் நான் இல்லை என்றும், பொய் வழக்கு, தனது தரப்பில் சாட்சிகள் இல்லை"** என்றும் கூறியுள்ளார்.

18) மேற்படி எதிரி புகார்தாரரிடம் பணம் எதுவும் வாங்கவில்லை என்றோ, பணத்தை திருப்பி செலுத்திவிட்டதாகவோ குறிப்பிட்டு எந்த எதிர்வாதமும் செய்யவில்லை. மாறாக எதிரி புகார்தாரரிடம் வழக்கு காசோலைகளை கொடுக்கவில்லை என்றும், புகார்தாரர் தான் தனக்கு பணம் கொடுக்கவேண்டும் என்றும் எதிர்வாதம் செய்துள்ளார். ஆனால் எதிரி வழக்கு காசோலைகள் தன்னுடையது இல்லை என்றும், வழக்கு காசோலைகளில் உள்ள கையொப்பங்கள் தன்னுடையது இல்லை என்றும் மறுக்கவில்லை. இந்நிலையில் எதிரியின் காசோலைகள் எவ்வாறு புகார்தாரர் வசம் சென்றது என்பதற்கு எதிரி தரப்பில் எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை.

19) மேலும் எதிரி தரப்பில் புகார்தாரருக்கு ரூ.8,38,000/- பணம் கொடுக்கும் அளவிற்கு போதிய வருமானம் இல்லை என்று எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. இது குறித்து புகார்தாரரை எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்த போது புகார்தாரர் தனது சாட்சியத்தில் **"30.10.2015, 02.11.2015 ஆகிய தேதிகளில் எனக்கு வருமானம் இருந்தது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, Statement உள்ளது, எதிரிக்கு கொடுத்ததாக சொல்லும் தொகையை எனது நிறுவனத்தின் மூலம் வந்த தொகையை கொடுத்தேனா என்றால் எனது நிறுவனத்தின் மூலம் வந்த தொகையை கொடுத்தேன், 30.10.2015, 02.11.2015, 31.12.2015 மற்றும் 14.01.2016 ஆகிய தேதிகளில் எதிரிக்கு கடன் கொடுக்கும் அளவிற்கு எனக்கு வருமான வசதி இல்லை என்றும், அந்த தேதிகளில் என் கையில் அவ்வளவு பணம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல, பணம் இருந்ததால் தான் கொடுத்துள்ளேன், எனக்கு வசதி இருந்தது"** என்று சாட்சியம் அளித்துள்ளார்.

20) மேற்படி புகார்தாரர் தனது சாட்சியத்தில் தனது நிறுவனத்தின் மூலம் வந்த வருமானத்தை எதிரிக்கு கொடுத்ததாக தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அதை நிரூபிக்கும் பொருட்டு பு.த.சா.ஆ.12 வங்கி கணக்கு அறிக்கையை தாக்கல் செய்து தனது வருமானத்தையும், எதிரிக்கு பணம் கொடுத்ததையும் நிரூபணம் செய்துள்ளார். பு.த.சா.ஆ.12 வங்கி கணக்கு அறிக்கையில் 30.10.2015-ம் தேதி ரூ.1,00,000/-மும், 02.11.2015 ம் தேதி ரூ.3,00,000/-மும், 31.12.2015 ம் தேதி ரூ.1,80,000/-மும்,

14.01.2016 ம் தேதி ரூ.2,50,000/-மும்,எதிரிக்கு பணம் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டு புகாரில் சொல்லியுள்ள சங்கதிகள் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலமாக நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி புகார்தாரர் தனக்கு வருமான வசதி உள்ளது என்பதையும், எதிரிக்கு பணம் கொடுத்ததையும் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்திருப்பதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

21) ஆனால் பு.த.சா.ஆ.12 ஆவணத்தை பொறுத்து எதிரி தரப்பில் எந்த ஆட்சேபணையும் தெரிவிக்கப்படவில்லை. இந்நிலையில் புகார்தாரர் தனது நிறுவனத்தின் மூலம் வந்த வருமானத்தை எதிரிக்கு கொடுத்ததாக சாட்சியம் அளித்திருப்பதால் நிறுவனத்தை ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்று எதிரி தரப்பில் வாதம் செய்வது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் KCR Enterprises புகார்தாரருக்கு சொந்தமானது இல்லை என்றும், அந்த நிறுவனத்திற்கு புகார்தாரர் உரிமையாளர் இல்லை என்றும் எதிரி தரப்பில் எந்த மறுப்பும் தெரிவிக்கவில்லை. மாறாக புகார்தாரர் தனது நிறுவனத்தின் PROFILE ஐ எதிரிக்கு இமெயில் அனுப்பியுள்ளதாக எதிரியே எ.த.சா.ஆ.1 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளார். இந்நிலையில் புகார்தாரர் நிறுவனத்திற்கு புகார்தாரர் உரிமையாளர் என்பதையும், அந்த நிறுவனம் புகார்தாரருக்கு சொந்தமானது என்பதையும் எதிரி ஒப்பு கொண்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் கருகிறது. எனவே புகார்தாரர் தனது நிறுவனத்தை ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்பதால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்ற எதிரியின் வாதம்

நிராகரிக்கப்படுகிறது.

22) மேலும் எதிரி வழக்கு காசோலைகளையும், வழக்கு காசோலைகளில் உள்ள தனது கையொப்பத்தையும் குறிப்பாக மறுக்கவில்லை. ஆனால் புகார்தாரரை எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்த போது எதிரி தரப்பு வழக்கறிஞர் 2 காசோலைகளிலும் எதிரியின் கையொப்பம் மாறுபட்டு இருப்பதாகவும், எழுதப்பட்டுள்ள விவரங்கள் வேறு வேறு கையெழுத்துகளில் இருப்பதாகவும், மையின் நிறம் மாறுபட்டு இருப்பதாகவும் எதிர்வாதம் செய்துள்ளார். ஆனால் வழக்கு காசோலைகளில் உள்ள கையொப்பத்தையும், எதிரி சட்ட அறிவிப்பை பெற்றுக்கொண்டதாக தாக்கல் செய்யப்பட்டுள்ள அஞ்சலக ஒப்புதல் அட்டையில் உள்ள எதிரியின் கையொப்பமும் ஒரே மாதிரியாக இருப்பது தெளிவாக தெரிகிறது.

23) காசோலைகளில் எழுதப்பட்டுள்ள விவரங்கள் மாறுபாடாக இருப்பதை பொறுத்து காசோலைகளை வைத்திருப்பவர் (Holder in due course) காசோலைகளை நிரப்பி கொள்ள சட்டத்தில் உரிமை உள்ள நிலையில் புகார்தாரர் வழக்கு காசோலைகளில் உள்ள கையெழுத்தை நிரூபிக்க முயற்சி எடுக்கவில்லை என்ற வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் வழக்கு காசோலைகளில் உள்ள கையொப்பம் எதிரியுடையது இல்லை எதிரி சொல்லாமல் எதிரியின் வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்த போது குறிப்பிட்டு எதிர்வாதம் செய்துள்ள நிலையில் எதிரியே அக்கூற்றை நிரூபிக்க கடமைப்பட்டவர்களாவார். ஆனால் எதிரி தரப்பில் அவ்வாறு வழக்கு காசோலைகளில்

உள்ள கையொப்பம் எதிரியுடையது இல்லை என்பதை நிரூபிக்க எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை.

24) மேலும் புகார்தாரர் அனுப்பிய சட்ட அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதாக பு.த.சா.ஆ.10, 11 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி எதிரி 2018 ம் வருடமே சட்ட அறிவிப்பை பெற்றுக்கொண்டுள்ள நிலையில் புகார்தாரரிடம் எந்த ஆவணங்களையும் தான் கொடுக்கவில்லை என்று சொல்லும் எதிரி ஏன் புகார்தாரரின் சட்ட அறிவிப்பை மறுத்து எந்த பதில் அறிவிப்பும் அனுப்பவில்லை என்பதற்கு எதிரி தரப்பில் எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை. மேலும் வழக்கு காசோலைகளை எதிரி புகார்தாரரிடம் கொடுக்காத போது வழக்கு காசோலைகள் எவ்வாறு புகார்தாரர் வசம் சென்றது என்பது குறித்தும் எதிரி தரப்பில் எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை.

25) மேலும் புகார்தாரர் தான் எதிரிக்கு பணம் கொடுக்கவேண்டும் என்று சொல்லும் எதிரி புகார்தாரர் கொடுக்கவேண்டிய பணத்தை திருப்பி கேட்டு ஏன் புகார்தாரருக்கு எதிராக எந்த சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்பதற்கும் எதிரி தரப்பில் எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை. புகார்தாரர் வழக்கு காசோலைகளை உண்மையாகவே தவறாக பயன்படுத்தியிருந்தால் புகார்தாரர் அனுப்பிய சட்ட அறிவிப்பை பெற்றுக்கொண்ட எதிரி புகார்தாரருக்கு எதிராக காசோலைகளை தவறாக பயன்படுத்தியுள்ளார் என்று காவல் நிலையத்தில் புகாரோ அல்லது அறிவிப்போ போன்ற சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பார்

என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

26) அவ்வாறு எதிரி எந்த சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளாமல், குறிப்பிட்டு எந்த ஒரு எதிர்வாதத்தையும் முன்வைக்காமல் புகார்தாரருக்கு போதிய வருமானம் இல்லை என்றும், புகார்தாரர் நிறுவனத்தை தரப்பினராக சேர்க்கவில்லை என்றும், வழக்கு காசோலைகளில் உள்ள எதிரியின் கையொப்பத்தில் K என்ற எழுத்தில் வேறுபாடு இருப்பதாகவும், எழுதப்பட்டுள்ள விவரங்களின் கையெழுத்து மாறுபட்டு இருப்பதாகவும் எந்த சாட்சிய சான்றவாணங்களும் தாக்கல் செய்யாமல் வாய்மொழியாக சொல்வதால் மட்டுமே புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் அனுமானத்தை மறுத்தலித்துள்ளதாக எடுத்துக்கொள்ள முடியாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

27) மேலும் எதிரி தரப்பில் காசோலை திருப்பப்பட்டுள்ள 30 நாட்களுக்குள் சட்ட அறிவிப்பு அனுப்பவில்லை என்றும், 2 வதாக காசோலை திருப்பப்பட்டதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றும் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் காசோலைகளை 2 வதாக வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டு 2 வது முறை திருப்பப்பட்டதற்கான குறிப்பாணைகள் பு.த.சா.ஆ.5 மற்றும் 6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களில் காசோலைகளின் செல்லுபடி காலமான 3 மாத காலத்திற்குள் காசோலைகளை 2 வது முறையாக வசூலுக்கு தாக்கல் செய்து அவைகள் மேற்படி போதிய பணமில்லாமல் திருப்பப்பட்டுள்ளது என்ற விவரம் தெரிகிறது. மேற்படி 2 வதாக காசோலைகள் திருப்பப்பட்ட தேதியிலிருந்து 30

நாட்களுக்குள் புகார்தாரர் எதிரிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்பதும், ஆவணங்களின் வாயிலாக தெரியவருகிறது. இந்நிலையில் எதிரியின் வாதமான காசோலைகள் திருப்பப்பட்டுள்ள 30 நாட்களுக்குள் சட்ட அறிவிப்பு அனுப்பவில்லை என்ற வாதமும், காலதாமதமாக சட்ட அறிவிப்பு அனுப்பட்டுள்ளது என்ற வாதமும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

28) இவ்வாறாக புகார்தாரருக்கு ஆதரவாக இருக்கும் அனுமானத்தை எதிரி தரப்பில் புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்வதின் மூலமும், சாட்சிகளை விசாரிப்பதன் மூலமும், ஆவணங்களை தாக்கல் செய்வதன் மூலமும், மறுத்தளிக்க தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

29) The Hon'ble Apex court has also held in **Rohitbhai Jivanlal Patel Vs State of Gujarat and another reported in (2020) 3 SCC (cri) 575** that the accused leads evidence to rebut presumption by probable defense is not adequate.

30) It has also been held in **Bir Singh V.Mukesh Kumar (2019) 4 SCC 197** that, a blank signed cheque leaf, voluntarily signed and handed over by the accused to the complainant, which is towards some payment, would attract presumption under Section 139 of the NI Act, in the absence of any cogent evidence to show that the cheque was not issued in discharge of a debt.

31) It has also been held in **Rangappa Vs Sri Mohan AIR 2010 SC 1898** that, The presumption referred to in Section 139 of N.I Act is a mandatory presumption

and not a general presumption. The burden upon the defendant of proving the non-existence of the consideration can be either direct or by bringing on record the preponderance of probabilities by reference to the circumstances upon which he relies. In case, where the defendent fails to discharge the initial onus of proof by showing the non-existence of the consideration, the plaintiff would invariably be held entitled to the benefit of presumption arising under Section 118(a) in his favour. The bare denial of the passing of the consideration apparently does not appear to be any defence. Something which is probable has to be brought on record for getting the benefit of shifting the onus of proving to the plaintiff. To disprove the presumption, the defendant has to bring on record such facts and circumstances upon consideration of which the court may either believe that the consideration did not exist or its non-existence was so probable that a prudent man would, under the circumstances of the case, act upon the plea that it did not exist.

32) மேற்படி முன் தீர்ப்புகளையும், மேற்படி விவரங்களையும் இந்நீதிமன்றம் கருத்தில்கொண்டு பார்க்கும்பொழுது எதிரி தரப்பில் சொல்லியுள்ள எதிர்வாதங்களை தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்க தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் கருதி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவுகள் 118 மற்றும் 139-ன் கீழான அனுமானத்தை புகார்தாரருக்கு அளித்து புகார்தாரர் தனது வழக்கை நிரூபணம் செய்துள்ளதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேற்சொன்ன விவரங்களை

கருத்தில் கொண்டு பார்க்கும்போது மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவுகள் 139 மற்றும் 118 (அ)-ன் கீழ் எதிரி முரண்பாடுகளை மெய்ப்பிக்கவில்லை என்றும் மெய்ப்பிக்கும் பொறுப்பானது புகார்தாரரின் மீது எதிரியால் மறுக்கத்தக்க சாட்சியங்கள் மற்றும் சாத்தியக்கூறுகள் வாயிலாக திருப்பப்படவில்லை என்றும், இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழ் குற்றம் புரிந்தவர் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. இது அழைப்பாணை வழக்கு என்பதால் தண்டணைக் குறித்த விவரங்கள் கு.வி.மு.ச. பிரிவு 248 (2)-ன் கீழ் எதிரியிடம் வினவப்படவில்லை.

33) வழக்கு காசோலைகளைப் பொறுத்து எதிரிக்கு சட்டப்படியாக செயல்படுத்தக்கூடிய கடன் மற்றும் கடப்பாடு உள்ளது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு - 138 ன் கீழ் குற்றம் புரிந்தவர் என்று தீர்மானிக்கிறது.

**34) முடிவாக,**

**எதிரி மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து மேற்படி குற்றத்திற்காக குற்றவாளிக்கு 6 மாத கால மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும் மற்றும் வழக்கு காசோலைகளின் இரட்டிப்பு மதிப்பான ரூ.16,76,000/-ஐ (ரூபாய் பதினாறு இலட்சத்து எழுபத்து ஆறாயிரம் மட்டும்) அபராத தொகையாக புகார்தாரருக்கு கு.வி.மு.ச.357-ன் கீழ் 2 மாதத்திற்குள் இழப்பீடாக வழங்கவும், அபராதத்தை கட்ட தவறினால் மேலும்**

**ஒரு மாத காலம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும் உத்திரவிடப்படுகிறது.**

35) இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் இல்லாததால் அது குறித்த எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 09-ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம் - திருமதி. V. பார்கவி, B.A., B.L., L.L.M.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
ஒசூர்.

**புகார்தாரர் தரப்பு சாட்சிகள்:**

1) பு.சா.1 - திரு. சின்னசாமி - புகார்தாரர்

**புகார்தாரர் தரப்பு சான்றாவணங்கள்:-**

| | | |
|---|---|---|
| 1) | 28.11.2017-ம் தேதியிட்ட ரூ.3,00,000/- (070896) க்கான ICICI வங்கி காசோலை (எண்ணிக்கை 1) - அசல் | பு.த.சா.ஆ.1 |
| 2) | 07.12.2017-ம் தேதியிட்ட ரூ.5,38,000/- (070897) க்கான ICICI வங்கி காசோலை (எண்ணிக்கை 1) - அசல் | பு.த.சா.ஆ.2 |
| 3) | 29.11.2017 -ம் தேதியிட்ட காசோலை திருப்பப்பட்டதற்கான | பு.த.சா.ஆ.3 |

| | | |
|---|---|---|
| | வங்கி குறிப்பாணை (எண்ணிக்கை 1) - அசல் | |
| 4) | 08.12.2017 -ம் தேதியிட்ட காசோலை திருப்பப்பட்டதற்கான வங்கி குறிப்பாணை (எண்ணிக்கை 1) - அசல் | பு.த.சா.ஆ.4 |
| 5) | 23.02.2018-ம் தேதியிட்ட காசோலை (070896) திருப்பப்பட்டதற்கான வங்கி குறிப்பாணை (எண்ணிக்கை 1) - அசல் | பு.த.சா.ஆ.5 |
| 6) | 23.02.2018-ம் தேதியிட்ட காசோலை (070897) திருப்பப்பட்டதற்கான வங்கி குறிப்பாணை (எண்ணிக்கை 1) - அசல் | பு.த.சா.ஆ.6 |
| 7) | 02.03.2018-ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு - அலுவலக நகல் | பு.த.சா.ஆ.7 |
| 8) | சட்ட அறிவிப்பு எதிரியின் வீட்டு முகவரிக்கு அனுப்பியதற்கான அஞ்சலக ரசீது - அசல் | பு.த.சா.ஆ.8 |
| 9) | சட்ட அறிவிப்பு எதிரியின் அலுவலக முகவரிக்கு அனுப்பியதற்கான அஞ்சலக ரசீது - அசல் | பு.த.சா.ஆ.9 |
| 10) | சட்ட அறிவிப்பை எதிரியின் வீட்டு முகவரியில் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை - அசல் | பு.த.சா.ஆ.10 |
| 11) | சட்ட அறிவிப்பை எதிரியின் அலுவலக முகவரியில் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை - அசல் | பு.த.சா.ஆ.11 |
| 12) | புகார்தாரரின் M/s. KCR Enterprises நிறுவனத்தின் 01.10.2015 முதல் 31.01.2016 வரையிலான வங்கி கணக்கு அறிக்கை - கணினி நகல் | பு.த.சா.ஆ.12 |

**<u>எதிரி தரப்பு சாட்சி : இல்லை</u>**

**<u>எதிரி தரப்பு சான்றாவணங்கள்</u>**:

| | | |
|---|---|---|
| 1) | புகார்தாரர் எதிரிக்கு அனுப்பிய Email ஆவணம் - கணினி நகல் | எ.த.சா.ஆ.1 |

**<u>சான்று பொருட்கள்: இல்லை</u>**

ஓம் - திருமதி. V. பார்கவி, B.A., B.L., L.L.M.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
ஓசூர்.

**<u>குறிப்புகள்</u>**:

1. எந்த சாட்சியும் மூன்று முறைக்கு மேல் விசாரணைக்காக அழைக்கப்படவில்லை.

2. வழக்கு முடிவடைந்ததை பற்றி புகார்தாரருக்கு தெரிவிக்கப்பட்டது.

3. தீர்ப்பின் நகல் எதிரிக்கு வழங்கப்பட்டது.